பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

A/L - 90
Weekend Classes
கலை, வர்த்தகம்
LOGIC 9-00
ECONOMICS 10-00
ACCOUNTS 11-00
TAMIL 11-00
COMMERCE 1-00
HINDUC ULTURE 1-00
NEW MASTER
INSTITUTE
1st Lane,
Power House Road,
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

A/L - 89
Weekend Classes
கலை, வர்த்தகம்
LOGIC -8-00
ECONOMICS-I -9-00
ACCOUNTS -10-00
TAMIL 10-00
ECONOMICS-II-11-00
COMMERCE -12-00
HINDU CULTURE- 12-00
NEW MASTER
INSTITUTE
JAFFNA.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸு ஆவணி ௴ 03 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 05 ( 19 08 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 161

# இரண்டாவது நாளாக பொலிஸ் மீது தாக்கு; படையினர் சுட்டு 3 பேர் பலி!

## பொலீஸார் ஒருவரும் மரணம் பொதுமக்கள் பலரும் காயம்

— அலுவலகச் செய்தியாளர்கள் —

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 19

யாழ்ப்பாண நகரத்தில், நேற்று இரண்டாவது நாளாகவும் இந்திய மத்திய ரிசேர்வ் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. நேற்றைய சம்பவத்தில் ஒரு பொலீஸ்காரர் மரணமானார். இருவர் காயமுற்றனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து, படையினர் நகரத்தின் பல பகுதிகளிலும் பரவலாக நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பொதுமக்கள் பலியாகினர். பலர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் (புதன்கிழமை) யாழ். பிரதம தபால் அலுவலகம் இயங்கும் வளவில் அமைந்துள்ள 'மாக்பெட்' கட்டடத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ஓர் இந்தியப் பொலீஸ்காரர் பலியானது தெரிந்ததே.

யாழ்ப்பாணத்தில் நேற்று ரோந்து சென்ற பொலீஸ் ஜீப் வண்டி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் இந்திய மத்திய ரிசேர்வ் பொலீஸ் படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் காயமடைந்தனர் என்றும் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் இந்தியப் படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

பலர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

நேற்றுக்காலை சுமார் 9.30 மணியளவில் இந்திய பொலீஸ் படையினரின் ஜீப் வண்டிகள் சச்சேரி - நல்லூர் வீதியால் ரோந்து வந்து கொண்டிருந்தன.

இந்த வீதியில் உள்ள கோவில் ஒன்றுக்குச் சமீபமாக ஜீப் வண்டிகள் சென்று கொண்டிருந்த போது திடீரென ஜீப்பை நோக்கிக் கைக்குண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றைய சம்பவத்தில் மரணமடைந்தோர் மற்றும் காயமடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 19


யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற அசம்பாவிதத்தின் போது மரணமடைந்தோர், மற்றும் காயமடைந்தோர் விவரம் வருமாறு:—

மரணமானோர்

(1) ஜேம்ஸ் அருமைநாதன் (வயது 49) யாழ். கோவில் வீதியைச் சேர்ந்த இவர் சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர்.

(2) அன்ரனிப்பிள்ளை புரூனோ கிறிஸ்ரி (வயது 31). பாஷையூரைச் சேர்ந்த இவர் பேராதனைப் பல்கலைக் கழக இறுதி வருடப் பொறியியல் பீட மாணவன்.

(6 ஆம் பக்கம் பார்க்க)



யாழ் நகரில் நேற்று நடைபெற்ற அசம்பாவிதங்களின்போது மரணமடைந்த பொதுமக்கள் மூவரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். (ஒ)

படங்கள்: ஜெயம்

## கப்பலில் வந்த அகதிகள் யாழ். செயலகத்தில் அடையாளக் கார்ட் பெறலாம்

யாழ்ப்பாணம், ஆக. 19

இந்தியாவிலிருந்து சடந்த மாதம் 9ஆம் திகதி தாயகம் திரும்பிய அகதிகளுக்கான அடையாளக் கார்ட்டுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ் செயலகத்தில் வைத்து வழங்கப்படும்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப தினத்தில் காங்கேசன்துறை இறங்குதுறைக்கு கப்பலில் வந்த அகதிகளுக்கே இந்த அடையாளக் கார்ட்டுகள் வழங்கப்பட உள்ளன.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். செயலகத்திற்கு வந்து அடையாளக் கார்ட்டுகளைப் பெற்றுச் செல்லுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. [ஒ-9]

### அகதிகளுக்கு பார்சல்கள்

யாழ்ப்பாணம், ஆக. 19

ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி இந்தியாவில் இருந்து காங்கேசன்துறைக்கு அகதிகளாக வந்திறங்கியவர்களுக்கு ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தால் வழங்கப்படும் பார்சல்கள் எதிர்வரும் 27ஆம் திகதி காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரியில் வைத்து வழங்கப்படும்.

அன்றைய தினம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்நகர் நேற்று அல்லோலகல்லோலம்

யாழ்ப்பாணம், ஆக 19

யாழ்ப்பாண நகரில் நேற்றுப் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது. மக்கள் ஒரு சில மணித்தியாலங்கள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர்.

நேற்றுக் காலையில் சச்சேரி-நல்லூர் பகுதியில் கேட்ட சரமாரியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தத்தை அடுத்து நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

கடைகளின் நிமித்தம் நகருக்கு வந்திருந்த மக்கள் கால் போன போக்கில் ஓடத் தலைப்பட்டனர்.

மினி வான்களும், ஏனைய வாகனங்களும் நாலா பக்கங்களிலும் சிதறி ஓடின, கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன-

பஸ் நிலையத்தில் நின்ற பலரும் யாழ். போதனா வைத்திய சாலைக்குள் சென்று தஞ்சமடைந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மண்டேலாவை நிபந்தனையுடன் விடுதலை செய்வதாக அறிவிப்பு

கேப்டவுன், ஆக 19

வன்செயலைக் கைவிடுவதாக உறுதியளித்தால் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ள கறுப்பு இனத் தலைவர் நெல்ஸன் மண்டேலா நேராக வீடு செல்லலாம்.

தென் ஆபிரிக்க ஜனாதிபதி போத்தா நேற்று இதனைத் தெரிவித்தார்.

சுகமடைந்தவுடன் மீண்டும் அவர் சிறைக்கு அனுப்பப்படமாட்டார். விடுதலை செய்யப்படுவார். ஆனால் ஒரு நிபந்தனை. வன்செயலைத் தூண்டமாட்டேன் என்று மண்டேலா உறுதி அளிக்கவேண்டும்.

திரு. போத்தா இப்படி மேலும் சொன்னார்.

## ஸியாவின் ஜனாஸா நாளை நல்லடக்கம்

இஸ்லாமாபாத், ஆக 19

மரணமடைந்த பாகிஸ்தான் அதிபர் ஸியா-உல் ஹக்கின் ஜனாசா நல்லடக்கம் நாளை சனிக்கிழமை பிற்பகல் ராவல்பிண்டியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சார்பில் ஜனாதிபதி வெங்கடராமன் கலந்துகொள்கிறார்.

சனிக்கிழமையைத் தேசிய துக்கதினமாகவும் விடுமுறைத் தினமாகவும் இலங்கை அரசு பிரகடனப்படுத்தி உள்ளது.

விபத்து நடந்த இட

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உலக அபிப்பிராயத்துக்கு மதிப்புக் குடுக்கிற அளவுக்கு போத்தா இன்னும் மசியிறதாய் இல்லைப் பின்னை...! அப்பிடித்தானே...?

## கிளிநொச்சியில் தொடர் ஷெல் தாக்குதல்!

கிளிநொச்சி, ஆக 19

நேற்று வியாழன் அதிகாலை கிளிநொச்சி அமைதிப்படை முகாமிலிருந்து வட்டக்கச்சி, கல்மடு, இரணைமடு காட்டுப் பகுதியை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதே சமயம் மேற்படி காட்டுப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர் தாக்குதல்களும் தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணம் இருந்தன.

இதனால் ஏற்பட்ட சேதவிவரம் குறித்து செய்தி எழுதப்படும் வரை தெரியவரவில்லை.

ஷெல் தாக்குதல்கள் காரணமாக வட்டக்கச்சி கல்மடு, இரணைமடு,

(6ஆம் பக்கம் பார்க்க)

உ
சிவமயம்

இன்று மங்களகரமான
திறப்பு விழா
'காவேரி சில்க்ஸ்'



அன்புடையீர்,

நிகழும் விபவ ஸு ஆவணி மாதம் 3ம் திகதி (19-8-88) இன்று வெள்ளிக்கிழமை காலை மணி 8.05 தொடக்கம் 9.30 வரையிலான சுபவேளையில் இல 48, யாழ்/ பெரியகடை வீதியில் அமைந்துள்ள எமது "காவேரி சில்க்ஸ்" ஸ்தாபனத்தை திறப்பு விழா செய்ய நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் சமுகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளர்:
காவேரி ரெக்ஸ் சென்ரர்
181, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C-6108)

## கைதான விடுதலைப்புலிகளில் 34 பேர் விடுதலை செய்யுமாறு

### கோரி நீதிமன்றில் மனு

சென்னை, ஆக. 19

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் காயம் அடைந்து உடல் ஊனமுற்ற விடுதலைப் புலிகள் தங்களை விடுதலை செய்யக்கோரி சென்னை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை இந்திய அரசு கைது செய்து காவலில் வைத்துள்ளது அல்லவா?

கைதானவர்களில் 34 பேர் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் சிக்கி கை, கால்களில் ஊனம் அடைந்தவர்கள். இவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக சென்னை வந்திருந்தனர்.

இந்த 34 பேரும் தாக்கல் செய்த மனு சென்ற 12 ஆம் திகதி சென்னை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

மனுவில் அவர்கள் கூறி இருந்ததாவது:

நாங்கள் ஸ்ரீலங்கா இராணுவத் தாக்குதலால் காயமடைந்து மருத்துவ சிகிச்சைக்காக சென்னையில் தங்கி இருந்தோம். இது இந்திய அரசுக்குத் தெரியும்.

யாருக்கும் தீங்கு செய்யாமல் நேர்மையுடன் வாழ்ந்து வருகிறோம். பொய்யான குற்றஞ்சாட்டி பழி வாங்கும் நோக்குடன் எம்மைச் சிறையில் அடைத்து உள்ளனர். எனவே எங்களைப் பிணையில் விடு

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

19 - 08 - 88
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
06 05 முதல் 07 35 வரை
ராகுகாலம்:
10 35 முதல் 12 05 வரை

## வவுனியாவுக்கு அப்பால் இன்று போக்குவரத்து நடைபெறும் சாத்தியம்

யாழ்ப்பாணம். ஆக 19

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு அப்பாலான பஸ் சேவைகள் இன்று நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்பகுதி தீவிரவாத இயக்கமான ஜே. வி. பி. கடந்த இரண்டுநாட்களாக ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்ததையடுத்து வடபகுதிக்கான போக்குவரத்துகள் வவுனியாவுடன் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இருநாள் ஹர்த்தால் நேற்றுடன் முடிவடைந்ததை அடுத்து இன்று தென்பகுதிக்கான சேவைகள் ஆரம்பமா

(6 ஆம் பக்கம் பார்க்க)

நாளைய சஞ்சீவியில்

★ யார் மனிதன்?
— திருமுருக கிருபானந்தவாரியார்
★ தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்!
★ 21 ஆம் நூற்றுண்டில் தமிழ் எழுத்துக்கள்!
★ சிறையில் வாடும் விடுதலைப்போராளி!
★ மாணிக்க இடைக்காடரின் 'லண்டன் அனுபவம்'
★ ஆணின் வலிமைக்குப் பின்னல் பெண்! - நடிகை ரேகா பேட்டி
★ 'கொரியா'க்கள் இணையுமா?
— உலக உலா
★ 'இலக்கு' இல்லாதது இலக்கியம் ஆகுமா?
— கலைஞர் உரை

மற்றும்
வழமையான, சுவையான அம்சங்களுடன்
வெளி வருகிறது

தவருது படியுங்கள்!
இன்றே ஆர்டர் செய்யுங்கள்!!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

மேசையில் வைத்து இயக்கக்கூடிய மின்சாரத்தில் இயங்கும் பஞ்சு மிட்டாய் செய்யும் மெசின் (தும்பு மிட்டாய் மெசின்) இந்தியாவில் தயாரிக்கப்பட்டது விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: நிக்கோ, 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (5700)

தமிழ் Type Writer (Erika) விற்பனைக்கு உண்டு. இம்மாதம் 19ம்-21ம் திகதிகளுக்கிடையில் மாலை 1-3 மணிக்கிடையில் கீழ்காணும் விலாசத்தில் பார்வையிடலாம். சி. சிவசக்தி, (Teacher) C/o, சிந்தாமணி, New Road, (Oxford Academy Lane) ஆறுகால் மடம், யாழ்ப்பாணம். (5821)

## வீடியோ - கமெரா விற்பனை

Nordmende, Sony, National வீடியோ கமெராக்கள், National (180/100), Orient (Portable Deck) ஆகிய வீடியோ கமெரா டெக்குகளும் (நல்ல நிலையில் உள்ளவை) இத்துடன் புத்தம் புதிய Minolta - 7000. கமெரா with Programme Flash (Min-Price - 30,000) உடன விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம்:- Seger Recording Bar- நெல்லியடி (Town) (5699)

## மைசூர் No.1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது No.1அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத, சுத்தம், சுவை, தரம் நிறைந்த மைசூர் No.1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும், (விசேஷ கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

## புத்தகம்

A/L 89,90 "காவியும் அதன் பிரயோகங்களும்" பிரயோக கணிதம் - படிமுறைப் பயிற்சிநூல் ஆசிரியர்:- சி. துரையப்பா. பல புதிய வினுக்களுட்பட 125 வினுக்களைக் கொண்ட பூரண பயிற்சி நூல். யாழ். கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு நகர புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். (5687)

## தவறிவிட்டது

ஆரியகுளத்திற்கும் கச்சேரியடிக்கும் இடையில் ஒருவெளிறிய மஞ்சள்நிற Travelling Bag தவறிவிட்டது. இதற்குள் முக்கிய தஸ்தாவேஜுக்கள் இருப்பதால் கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், Dr. (Mrs) Indra Sathiyanathan, (5816)

## தவறிவிட்டது

சென்ற செவ்வாய்க்கிழமை 9-8-88 அன்று உடுவில் ரொட்டியாலடி சங்கக்கடைக்கு அருகாமையில் ஓர் மூக்குக் கண்ணுடி தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். நன்றி. சன்மானம் வழங்கப்படும். திரு. பி. சி. சுப்பிரமணியம், இளைப்பாறிய ஆசிரியர், உடுவில். (ஐயர் மில்) (5902)

## தேவை

மன்னார் சிலாவத்துறையில் பேக்கரி ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த பாண் தயாரிப்பவர் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தங்குமிடவசதிசெய்துகொடுக்கப்படும். இம்மாதம் 31ந் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும், சாந்தி பேக் ஹவுஸ். பிரதான வீதி, சிலாவத்துறை. (5818)

## அச்சக வேலையாட்கள் தேவை

அனுபவம்மிக்க அச்சக எழுத்துக் கோர்ப்பாளர், மெஷின் மைன்டர் தேவை. தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். மேலும் விபரங்கட்கு: ஸ்ரீ மகள் பதிப்பகம் அளவெட்டி (5903)

## Garments-Vacancy

கொக்குவிலில் இயங்கிக் கொண்டிருக்கும் Garments Centre க்கு சகலவிதமான கட்டிங் தெரிந்த பெண்களும், தைப்பதில் அனுபவம் உள்ள பெண்களும் உடன் தேவை. நேரில் வரவும். தொடர்பு:- Vertex Travels கொக்குவில் சந்தி, கொக்குவில். (5697)

## சோதிட நிபுணர் சக்தி சரவணு

'சக்தி சரவணு' 20-8-88 முதல் 27-08-88 வரை வெளியூர் விஜயம் மேற்கொள்வதால் அன்பர்கள், வாடிக்கையாளர்கள், பதிவு செய்தவர்கள், 28-8-88 முதல் வழமைபோல் சோதிட நிபுணரை சந்திக்கலாம். 'சக்தி சரவணு' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், (இந்துக்கல்லூரியருகில்) (C/6270)

## அம்பாள் டியூசன் சென்ரர்

அம்பாள் டியூசன் சென்ரர்- A/L 89/90 கலை, வர்த்தக வகுப்புக்கள்ஆரம்பம் 01.09.1988 அனுமதிக்கு முந்துங்கள். மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. தொடர்பு விலாசம்:- 18, மணல்தறை வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (5696)

## Spoken English with Grammar

Spoken English with Grammar வார இறுதி வகுப்பு ஆரம்பம் 20-8-88 சனி / ஞாயிறு நாட்களில். பிற்பகல் 3 மணி-5 மணி. Advanced English புதிய பிரிவு ஆரம்பம் 20-8-88 காலை 8 மணி — 10 மணி சனி/ ஞாயிறு நாட்களில். S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (5736)

## A/L - 89/90

தூய, பிரயோககணித வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. 90 பிரிவு:- நிலையியல, அட்சர கணிதம் சனி, ஞாயிறு 10.45 a.m., 89 பிரிவு:- சார்பு ஆர்முடுகல், வரைபுகள் திங்கள் செவ்வாய் 2.30 p.m. சி. துரையப்பா கொட்டடிச் சந்தி, யாழ்நகர். (5905)

## திருமணப் பந்தல்

மங்களகரமான வாழ்வை அமைக்க, திருமண ஒழுங்குகள் செய்து கொள்ள இன்றே நாடுங்கள் 'Nico Traders' இந்து, கிறிஸ்தவ மணமகன், மணமகள் - மாற்றுச் சம்பந்தங்கள் முதலிய சகல விடயங்களும் ஒழுங்கு செய்யப்படும். 'Nico-Traders' 460, ஆஸ்பத்திரி வீதி, (சஞ்யுவான் ஆலயம் அருகில்) யாழ்ப்பாணம். (C/6271)


## 300 பேர் கைதாம்!

கொழும்பு, ஆக 19 வடக்குப் பகுதிக் காடுகளுக்குள் இந்திய அமைதிப் படையினர் பெரிய அளவில் நடத்திய தேடுதலில் சுமார் 300 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

இத் தகவலை கொழும்பில் இராணுவ அதிகாரி தெரிவித்தார். (ஒ-எ)


## கம்பியூட்டர் விரிவுரைகள்

BASIC
4 Months

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

Weekdays

Tuesdays — 9. 00 - 11. 00
Fridays — 9. 00 - 11. 00

Commencement: 19-8-88

Weekends

Saturdays — 1. 30 - 3. 30
Sundays — 8. 30 - 10. 30

Commencement: 27-8-88

Fees: மாதம் 250/- மட்டுமே

JOIN THE LEADERS

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(OLR தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம்)
16, 3ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
(C-6276)


yுந்த நிறுத்தத்துக்கு

# தென் துருவ தமிழ் சங்க சம்மேளனம் கோரிக்கை

சென்னை, ஆக. 18 இலங்கையில் இந்திய அமைதிப்படை நடத்தி வரும் நடவடிக்கைகளை உடனே நிறுத்தி, சுமுகமான தீர்வு காண பேச்சு வார்த்தை நடத்த இந்தியாவை வலியுறுத்த வேண்டுமென்று தென் துருவ தமிழ்ச்சங்க சம்மேளனம் ஆஸ்திரேலிய அரசாங்கத்தை வலியுறுத்தியிருக்கிறது.

பிரஸ்தாப சம்மேளனத்தின் செயலாளர் திரு. கே. சோமசுந்தரம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதே வேளையில் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை ஆகியவற்றை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு மேற்படி சம்மேளனமும் ஆஸ்திரேலியாவிலுள்ள தமிழ்ச்சங்கமும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. (ஐ-4)


# மக்கள் மனம் கவர்ந்த சமூகத் தொண்டன்



## அமரர் ஜே. எம். சபாரட்ணம் அவர்கள்

மலர்வு: 10 - 12 - 1913 உதிர்வு: 11 - 08 - 1988

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983இன் செயற்குழு அங்கத்தவர்களும், அலுவலக உத்தியோகத்தர்களும் எமது முன்னாள் தலைவரும் இன்றைய பொருளாளருமாகிய திரு. ஜெ, எம். சபாரட்ணம் அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அதிர்ச்சியையும் கவலையையும் தெரிவிக்கின்றோம். அவருடைய மறைவினுல் கவலையுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது உள்ளம் கலந்த அனுதாபங்களை அறிவிக்க விரும்புகின்றோம்.

கடந்த ஐந்து வருட காலமாக யாழ்ப்பாணத்தில் அகதிகளின் ஈடேற்றத்திற்கென இடைவிடாது உழைத்தவர் திருவாளர் சபாரட்ணம்.

"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

என்ற வள்ளுவர் வாசகத்துக்கு அமைய தன்னலமற்ற சேவை ஆற்றி மக்களின் மனதைக் கவர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த திருவாளர் சபாரட்ணம் பரியோவான் கல்லூரியில் தன் கல்வியை முடித்த பின்னர் காரியாதிகாரியாக நியமனம் பெற்று வடக்குக், கிழக்கு மாகாணங்களில் திறம்படச் சேவையாற்றினுர். இறுதியில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இருந்து இளைப்பாறினுர். இதன் பின்னர் அவரது சமூகத் தொண்டுகள் பெரிதும் விரிவடைந்தன.

1983ஆம் ஆண்டு தொடக்கம் பல்லாயிரக் கணக்கான அகதிகளைப் பேணும் கடமை யாழ்ப்பாண மக்களைச் சார்ந்தது. இந்தக் கட்டத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983 நிறுவப்பட்டது. அப்பொழுது அதன் ஸ்தாபகர்களில் ஒருவராக அந்நிதியத்தின் முதலாவது பொருளாளராகப் பணிபுரிந்தார். பின்னர் அந்நிதியத்தின் தலைவராகவும் அதன் பின்னர் திரும்பவும் பொருளாளராகவும் ஐந்து வருடங்கள் சலியாது உழைத்தார். இக்காலத்தில் 80 இலட்சம் ரூபாவிற்கு மேல் திரட்டி பாதிக்கப்பட்டோரின் நலனுக்காகத் திட்டங்களைத் தீட்டியும் செயற்படுத்தியும் அவர் ஆற்றிய பணி பொதுமக்கள் பலருக்குத் தெரியும். நிதி சேகரிப்புக்காகப் பல சர்வதேச ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டார். அரசாங்க அதிபர் செயலகத்துடனும் வேறு நிறுவனங்களுடனும் ஒத்துழைத்தார். எவ்வளவு நேரத்தைத் தன்னலம் கருதாது பொதுப்பணிக்காக அர்ப்பணித்தார் என்பது சிலருக்கு மட்டுமே தெரியும்.

மக்கள் பணிக்கு அமைய வேண்டிய குணங்கள் யாவும் அவரிடம் மிகுந்திருந்தன. உள்ளத் தெளிவு, மனஉறுதி, விடா முயற்சி, நேர்மை, எடுத்துரைக்கும் ஆற்றல் ஆகியவை இவரை முன்னணியில் நிறுத்தின. இவருடைய இடத்தை இன்னொருவர் எடுக்கலாம் என்பது அரிது. இவரது நற்பணிகளின் சிறப்பால் தமிழ் மக்களின் உள்ளத்திலெல்லாம் இவரது நாமம் நிலைத்திருக்கும்.

அவரது ஆத்மா சாந்தி அடைவதாக!

அகதிகள் புனர்வாழ்வு நிதியம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C 5310)


GOLDEN TRAVELS & TOURS

ஓராண்டுக் காலத்தில் பொன்னுன சேவை!

யாழ் பிரதேச மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்!!

வெளிநாட்டுப் பயண ஒழுங்குகளில் ஓர் புரட்சி!!!

# இன்று ஓராண்டை நிறைவு செய்யும்



எமது ஸ்தாபனம் தொடர்ந்து யாழ். பிரதேச மக்களுக்குச் சேவையாற்ற வாடிக்கையாளர்கள், அன்பர்கள் ஆதரவாளர்கள் யாபேரினதும் நல்லாதரவை நாடிநிற்கும் அதே வேளையில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் ஆதரவளித்து எம்மை உற்சாகப்படுத்திய அனைவருக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்ளேம்.

## சவூதி அரேபியா, குவைத்

மற்றும் மத்தியகிழக்கு நாடுகளுக்கான பிரயாண ஒழுங்குகள்

1. முற்பணம் அறவிடாமலும்
2. விமான நிலையவரி அறவிடாமலும்
3. வைத்திய பரிசோதனைச் செலவு இன்றியும்

ஏனைய சலுகைகளுடன் நம்பிக்கை நாணயத்துடன் செய்து தரப்படும்.

தலைமையகம்: **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
புகையிரத நிலைய வீதி, சுன்னுகம்.

கிளை: 1
கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை: 2
கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்
[illegible]

(C 6272)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்தியில் பங்கு கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம், ஆக. 19

ஒரு பாடசாலையோ அல்லது எந்த ஒரு சமூக நிறுவனமோ அதன் இலக்கை அடைய அதன் பங்காளர் ஒவ்வொருவரும் தத்தம பங்களிப்பைச் செலுத்த வேண்டும். அந்த வகையில் பாடசாலையின் முக்கிய பங்காளிகளான பெற்ரோர், ஆசிரியர், பழைய மாணவர்கள் ஆகியோர் பொறுப்புணர்ந்து பாடசாலையின் அபிவிருத்தியில் பங்கு கொள்ள வேண்டும்.

யாழ். ஈனசரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் தலைமையுரையாற்றிய அதிபர் திரு. மு. இராமலிங்கம் இவ்வாறு கூறினார்.

பிள்ளைகளின் முன்னேற்றத்தைப் பெற்ரோர் அன்ருடம் கவனித்து பாடசாலை அதிபர், ஆசிரியர் ஆகியோருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

(இ - ஐ)

## இலங்கை வங்கிக் கிளையில் கட்டணம் செலுத்தலாம்

யாழ்ப்பாணம், ஆக. 19

அதிபர் தரம் I, II, IIIக்கு விண்ணப்பிப்போர் தமது விண்ணப்பக் கட்டணமான 75 ரூபாவை யாழ். ஆஸ்பத்திரி வீதி, இலங்கை வங்கிக் கிளையில் செலுத்தலாம்.

இந்தக் கட்டணத்தை யாழ். கச்சேரியில் செலுத்துமாறு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

(ஒ - க)

## பாலத்தை திருத்தக் கோரிக்கை

பருத்தித்துறை, ஆக. 19

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதி திருத்தப்படுகிறது.

ஆனால் தெருமூடி மடத்துக்கும், மாலி சந்திக்கும் இடையில் சென்ற ஆண்டு லிபரேஷன் ஒப்பரேஷன் நாட்களில் இராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட பாலம் திருத்தப்படவில்லை.

இதனல் இப் பிரதான வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் அண்மையிலுள்ள வைரவர் கோவில் வீதியூடாகச் செல்கின்றன.

சடந்த ஓராண்டு காலமாக அவ்வீதியைப் பாவித்ததினல் இன்று குன்றும் குழியுமாக அந்த வீதி காணப்படுகின்றது.

அப்பாலத்தையும் திருத்துமாறு அல்வாய் சனசமூக நிலையத்தினர் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரையை வேண்டியுள்ளனர்.

(இ- 118)

# விடுதலையான இளைஞர்கள் இந்திய அமைதிப் படை

## உயர் அதிகாரிகளைச் சந்தித்தனர்

திருகோணமலை, ஆக 19

பூஸா மற்றும் வேறு பல தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் இந்தியப்படையின் உயர் அதிகாரி லெப். ஜெனரல் ஜமீல் மொகமட், பிரிகேடியர் மிஸ்ரா ஆகியோரை திருமலை சென்ற் சேவியர் பாடசாலை மண்டபத்தில் சந்தித்து உரையாடினர்.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விடுதலை, விடுதலை செய்யப்பட்டவர்களின் புனர்வாழ்வு போன்ற விவரங்களை இளைஞர்கள் எடுத்துக் கூறினர்.

பூஸா முகாமிலிருக்கும் இளைஞர்களில் 6 இளைஞர்களுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டுள்ளதையும் இளைஞர்கள் எடுத்து விளக்கினர்.

இளைஞர்கள் சார்பில் திரு. ரி. சிவராசா, ஸ்டீபன், சகுந்தலா என்னும் பெண் ஆகியோர் பல விடயங்களை எடுத்துக் கூறினர்.

விடுதலைசெய்யப்பட்டவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 2000 ரூபாவை 4000 ரூபாவாக அரசாங்கம் அதிகரித்துள்ளதாகவும் மிகுதியான 2000 ரூபாவும் விரைவில் வழங்கப்படுமெனவும் அதிகாரிகள் கூறினர்.

(இ-150)

உ
சிவமயம்

திருமண · அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆவணித்திங்கள் 3ஆம் நாள்
19-8-1988 வெள்ளிக்கிழமை காலை 10-46 மணி முதல்
நண்பகல் 12-20 மணி வரை உள்ள
சுப முகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எமது புத்திரன் | எனது கனிஷ்ட புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| குணபாலசிங்கம் | சாந்தினி |
| Dietli Str-2 | Dorf Str-3 |
| 9000 St-Gallon | 8037 Zurich |
| SWITZERLAND | SWITZERLAND |

திருவருள் துணை கொண்டு திருமணம் சுவிற்சலாந்தில்
நடைபெறுகின்றது என்பதை உற்ருர், உறவினர்,
நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்ருேம்.

இங்ஙனம்

| | |
|---|---|
| திரு. திருமதி | திருமதி |
| நா. கோவிந்தபிள்ளை, | செ. தம்பிப்பிள்ளை |
| 252, வட்டக்கச்சி, | 12 ஆம், வட்டாரம், |
| கிளிநொச்சி. | புங்குடுதீவு. |

(5861)

இலங்கை அதிபர்கள் சேவையின் I-ஆம் II-ஆம் III-ஆம்
தரங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான

போட்டிப் பரீட்சை

1988 ஒக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

1½ மாத துரித பயிற்சி வகுப்புகள்

பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை

ஆரம்பம்: 3 - 9 - 88

பாடநெறி:- (I) கிரகித்தல், (II) பொது அறிவு
(III) கல்விக் கொள்கையும் நிர்வாகமும்.

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
(பி. ப. 1-4 மணிவரை)
★ கட்டணம் ரூபா 250.00 - (முழுப்பயிற்சிக்கும் தரம் I, II)
★ கட்டணம் ரூபா 200.00 - (தரம் III)

விபரங்களுக்கு: நேரில்/தபாலில்.

ASTAN INSTITUTE

166/1 HOSPITAL ROAD - JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1 ஆம் மாடி)

(C/6265)

வட பகுதிக்கு

# ஜப்பானிலிருந்து அதி நவீன தெளி கருவிகள்

## மா, பலா, தோடை, எலுமிச்சை உற்பத்தியை அதிகரிப்பதற்கு

பண்டத்தரிப்பு, ஆக 19

வடபகுதி பலா, மா, தோடை, எலுமிச்சை போன்ற கனிமரங்களுக்கு கிருமிநாசினி தெளிக்க அதி நவீன சக்தி மிக்க மூன்று தெளிகருவிகள் ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு ஆண்டு காலமாக வடக்கில் மேற்படி கனிமரங்களின் உற்பத்தி பெரிதும் குறைந்துள்ளது.

பூச்சிகள், ஒருவித இலையான் என்பன பிஞ்சுகளையும் பூக்களையும் தாக்கி வந்தன.

இதன் பயனக வெளிமாவட்ட ஏற்றுமதிக்கு பழங்கள் இல்லாது போனதுடன் உள்ளூர் தேவைக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்நிலைமை பற்றி அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கத்துக்கு எடுத்துக்கூறியதை அடுத்து அவர் இந்த மூன்று கருவிகளையும் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்ய பணம் ஒதுக்கித் தந்தார்.

யாழ் கமநல சேவை ஆணையாளர் திரு. த. பரமலிங்கம் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார்.

இவற்றை சேவையில் ஈடுபடுத்தத் தொடங்குவதற்கு முன் யாழ் மாவட்ட பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களுக்கு யாழ் மாவட்ட விவசாய பயிற்சிச் சாலை மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்படும்.

(இ-120)

## மகாபாரத விரிவுரை

யாழ்ப்பாணம், ஆக. 19

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்த ஆதீன மண்டபத்தில் தினமும் மகாபாரத விரிவுரை நடைபெறுகிறது.

பிரம்ம ஸ்ரீ வை நித்தியானந்த சர்மாவினல் நிகழ்த்தப்படும் இந்த மகாபாரத விரிவுரை நல்லூர் ஆலய அர்த்தஜாமப் பூசையைத் தொடர்ந்து ஆரம்பமாகும்.

நல்லூர் சைவ மகா சபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

(இ- ஐ)

## திருமலையில் பட்டப் பகலில் கொள்ளை

திருகோணமலை, ஆக 19

பட்டப் பகலில் ஆயுதம் தரித்த மூவர் கொண்ட கோஷ்டி ஒன்று திருகோணமலை கிறீன் வீதியிலுள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து நகைகள், பணம் உட்பட 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளை அடித்துச் சென்றனது.

இச் சம்பவம் சென்ற வாரம் கிறீன் வீதியிலுள்ள நாமகள் முருகையா என்பவரின் வீட்டில் இடம் பெற்றது.

கணவர் வெளி நாட்டில் இருக்கிருர். அங்கு பெண்கள் தான் இருந்தனர். திருமதி நாமகள் முருகையாவைப் பயமுறுத்தி அவரின் தாலிக்கொடி உட்பட பல பெறுமதியான நகைகளையும், பணத்தையும் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றனர்.

(இ-150)

## இரண்டு நாட்களில்:

# மட்டக்களப்பில் இளம்பெண் உட்பட 6 பேர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஆக19

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருநாட்களில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் இளம்யுவதி உட்பட 6பேர் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்கள்.

இச் சம்பவங்களில் கொலையுண்டவர்கள் பின்வருவோர்என அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

...த்துருக்கொண்டான் வாசியான செல்வி. சு. சுசிலாதேவி (22) நாவற்குடா வாசியான அ.புவனேசராஜா(32)வியாபாரி

புதூர் வாசியான ந. சாந்தகுமார் (22) பாண் வியாபாரி.

கொம்மாதுறை வாசியான எஸ் சிவானந்தம் (26)வியாபாரி.

ஜயந்திபுர வாசியான த. ரவிச்சந்திரன் (21) மீனவர்.

இருதயபுர வாசியான ஞா. இருதயநாதன்( 22) மீனவர்.

மேற்படி அறுவரும் தமதுவீட்டுச்சுற்ருடலில் இறந்து கிடந்தனர்.

(ஒ-21)

# ஸ்ரீலங்கா கடற் படையால் படகுச் சிப்பந்தி தாக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம், ஆக 19

நயினதீவு - குறிக்காட்டுவான் படகுச்சேவையில் ஈடுபட்டிருந்த சிப்பந்தி ஒருவர் ஸ்ரீலங்கா கடற்படையினரால் நையப்புடைக்கப்பட்டாராம்.

பிரஸ்தாப சேவையில் ஈடுபடும் நாகஜோதி - 2 என்ற படகின் சிப்பந்தியே தாக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை 13 ஆம் திகதி நயினதீவு ஸ்ரீலங்கா கடற்படை முகாமில் நடைபெற்றது.

இந்தப் படகு சம்பவ தினத்தன்று பிற்பகல் 3. 45 மணி அளவில் குறிகாட்டுவானிலிருந்து பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு நயினதீவுக்கு சென்றது.

அவ்வேளையில் நயினதீவு நாகவிகாரை ஸ்ரீலங்கா கடற்படை முகாமில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சோதனையின் போது படகிலிருந்து வெற்றுத் தோட்டா ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டே இவர் பலத்த தாக்குதலுக்கு உள்ளானுராம்.

(ஒ-9)

## மானிப்பாயில் நவீன விளையாட்டு மைதானம்

மானிப்பாய், ஆக 19

மானிப்பாயில் சகல வசதிகளையும் கொண்ட விளையாட்டு மைதானம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

மானிப்பாய் பெருமகன் அதிகார் அ. செல்லமுத்து அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட செல்லமுத்து விளையாட்டு மைதானக் காணியை விளையாட்டரங்கம் நிறுவுவதற்காக ரூபா 6 லட்சம் விலைகொடுத்து அரசாங்கத்திடம் வாங்கிக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மானிப்பாய் பட்டின உப அலுவலகத்துக்கான பொது விளையாட்டு மைதானமாக இது உபயோகப்படுத்தப் படவுள்ளது.

(ஐ-90)

## தனிச் சிங்களச் சட்டத்தினல் பாதிக்கப்பட்டவர்கள் ஜனதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஆக19

1956 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தின்மூலம் இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர்களின் சங்கம் தமக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

சம்பந்தப்பட்ட சட்டத்தின் மூலம் தமக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் குறித்தும், அவல நிலை குறித்தும் இந்தியத்தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றுக்கும் பிரஸ்தாப சங்கம் தனியான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

தமது நல்லெண்ணத்தைப் பாவித்து இது குறித்து ஜனதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமக்கு ஏற்பட்ட இழப்பையும், நஷ்டத்தையும் ஈடு செய்ய உரிய நஷ்ட ஈடு பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி இந்த சங்கம் இந்தியத் தூதுவருக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டிருக்கிறது.

(ஐ)

## மொட்டை அடிக்கப்பட்டு ஊர்வலம்

கரவெட்டி, ஆக 19

மாடு, சைக்கிள் போன்ற திருட்டுக்களில் ஈடுபட்டார் என்று கூறப்படும் நபர் ஒருவர் மொட்டை அடிக்கப்பட்ட நிலையில் வீதியால் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

நெல்லியடியைச் சேர்ந்தசிலரை விடுதலைப் புலிகள் கைது செய்து விசாரணை நடத்தியிருந்தனர்.

இதற்கு முன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயப் பெண்கள் பிரிவில் களவாடிய இருவர் [illegible] ...ருந்தனர்.

(இ-70)

## வவுனியாவின் புதிய அரச அதிபர்

வவுனியா, ஆக 19

வவுனியா அரசாங்க அதிபராக, திரு. ரீ. லங்காநேசன் நியமிக்கப் பட்டுள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் அரசாங்க அதிபராக ஏழு ஆண்டுகள் கடமையாற்றிவந்த திரு. கே. சி. லோகேஸ்வரன் நேற்று 18 ஆம் திகதி தொடக்கம் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளராகப் பதவிப் பொறுப்பேற்கின்ருர்.

(இ-ஐ-164)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



★ செல்வி றுபாஜினி ★

நாவலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட றூபேட் ஜெயருேசா தம்பதிகளின் அருமைப் புதல்வி செல்வி றுபாஜினி தனது முதலாவது பிறந்த தினத்தை 19. 8. 1988 ல் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிருர். றுபாஜினியை அப்பா, அம்மா, பெரியண்ணு, சின்னண்ணு, தொட்டம்மா, சவூதியில் உள்ள தொட்டப்பா, அம்மம்மா, அப்புச்சி, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பா, அக்காமார், அண்ணன்மார், மச்சான்மார், மச்சாள்மார், கலா அக்கா, நவமண்ணன், நவமக்கா மற்றும் உறவினர்கள், நண்பர்கள், சீரும் சிறப்புடன், பல்கலையும் சற்று நீடூழி காலம் நல்ல சுகத்துடன் வாழ வாழ்த்துகிருர்கள்.

(5856)

## தனியார் பேருந்துச் சங்கம்

பச்சிலைப்பள்ளி ஆக. 19

பளை - சாவகச்சேரி தனியார் பேருந்து சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில்சங்கத் தலைவர் திரு.சி. நாகலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.


நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சி. நாகலிங்கம், செயலாளர் சி.கனகசபை, குழுஉறுப்பினர் - கதிர்காமநாதன், க. கமலநாதன், க. குலவீரசிங்கம்.

[ஐ-ரி)

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

Grant BJK&E PFL 1157

தினமும் டியூரோல்® அருந்துங்கள்.
அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.

Pfizer

சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 22-1-1904

மறைவு: 31-8-1987

அமரர்
**திரு. வைரமுத்து - நல்லதம்பி**
(புங்குடுதீவு)
திதி- 19.8.88

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து எங்களுக்கெல்லாம் வழி காட்டிய அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டு அகலமாட்டா.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உம் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

'புன்னகை வாசம்'
10-ம் வட்டாரம்,
புங்குடுதீவு.
[5787]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. மருதர் சுப்பிரமணியம் (மணியம்)**
கமத்தொழில் சேவைத் திணைக்களத்தின் கமக்காரர் பிரதிநிதி

மலர்வு 07-06-1907 — உதிர்வு 20 07-1988

அன்புடனும் பாசமுடனும் எம்முடன் வாழ்ந்து எம்மைப் பக்குவமாக வளர்த்தெடுத்த அன்புத் தந்தையே! உங்கள் பிரிவால் நாம்வாடுகின்றோம். துயருறுகின்றோம். உங்கள் இனிய நினைவுகள் எமது நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

''கிரவுஞ்சகிரி''
நவாலி வடக்கு.
மானிப்பாய்.
(5852)

## 1st ANNIVERSARY
In Loving Memory of our Darling Dada



Pius BASTIAMPILLAI
**Called to Rest:- 20-th August 1987**

**Darling Dada,**

Though you left us so suddenly,
Your last thoughts were unknown,
You left a beautiful memory,
That we are proud to own,
All our lives, we shall miss you,
As the years come and go.
But In our hearts you will live forever.

Because we love you, so sadly missed by your loving wife and children.

A Requiem high mass will be sung at our Lady of Refuge Jaffna on Saturday 20. 08 1988 at 6.00 a. m.

155, 4-th CROSS STREET,
JAFFNA.

(5799)

### பாய் கைத்தறிக்கு புதிய கட்டடம்

முல்லைத்தீவு, ஆக. 19

முல்லைத்தீவு மாவட்ட சமாஜத்தின் முயற்சியால் துணுக்காய் கலைமகள் சிக்கனகடன் உதவு கூட்டுறவுச் சங்கத்துக்கு பாய் கைத்தறி செய்வதற்காக 72 ஆயிரம் ரூபா செலவில்கட்டடம் ஒன்று கட்டப் பட்டுள்ளது.

இம்மாத இறுதியில் திறப்புவிழா இடம் பெறும். (இ-ஐ-94)

### படுக்கையில் வைத்து இளைஞர் குத்திக் கொலை

பாலையூற்றைச்சேர்ந்த ரவி என்று அழைக்கப்படும் மயில்வாகனம் தர்மலிங்கம் (27 வயது) என்பவர் 13 ஆம் திகதி இரவு படுக்கையில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் குத்திக் கொலைசெய்யப்பட்டார்.

மரண விசாரணையை பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராசா மேற்கொண்டு கொலை எனத் தீர்ப்பு வழங்கினார். (இ-150)

## வடக்கில் அதிகரித்து வரும் கர்ப்பிணித் தாய்மார் மரணத்தைதடுக்கநடவடிக்கை
### கொழும்பில் அமைச்சருடன் மாநாடு

யாழ்ப்பாணம், ஆக. 19

வடபகுதியில் அதிகரித்துவரும் கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பைத் தடுப்பதற்காக துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது குறித்து சுகாதார அமைச்சருடனான கூட்டம் ஒன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இத்தகவலை தாய் சேய் நலனிற்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடபகுதியில் கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பு விகிதம் அதிகரித்துள்ளது. 1981—1982 ஆம் ஆண்டுகளில் 14 தொடக்கம் 15 ஆக இருந்த மரணங்கள் 1987 ஆம் ஆண்டில் 23 ஆக அதிகரித்தது.

1988 ஆண்டு ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் இறந்த தாய்மாரின் எண்ணிக்கை 26. இந்த எண்ணிக்கையானது 87 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 100வீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

இந்த அதிகரிப்பிற்கான காரணங்களில் முக்கியமானது மருத்துவ மாதுக்களின் பற்றாக்குறையாகும். வடபகுதியில் மருத்துவ மாதுக்களின் பற்றாக்குறை சுமார் 70 வீதம் ஆகும். (யாழ் போதனா வைத்தியசாலையில் 34 மருத்துவ மாதுக்களுக்குப் பதிலாக 14 மருத்துவ மாதுக்களே கடமையாற்றுகின்றார்கள்)

மேலும் கர்ப்பிணிகளின் பராமரிப்புப் போதாமை, போஷாக்கின்மை, போக்குவரத்து வசதியீனம் என்பனவற்றுடன் கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட பதற்ற நிலையும் கணிசமான கர்ப்பிணிகளின் இறப்பு விகிதம் அதிகரிக்கக் காரணங்களாக இருந்தது.

கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பினைக்குறைப்பதற்கு வடபகுதி சுகாதார அதிகாரிகள் பின்வரும் முக்கிய கோரிக்கைகளை சுகாதார அமைச்சரிடம் முன்மொழிய இருக்கின்றனர்.

★ ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, சங்கானை ஆகிய பகுதிகளுக்குப் பயன்படுத்தவென மூன்று அம்புலன்ஸ்களை உடனடியாக தந்து உதவுதல் வேண்டும்.

★ யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் 50 மருத்துவ மாதுக்களை பயிற்றுவிக்கும் வாய்ப்பு உண்டு. எனவே இங்கு மருத்துவ மாதுக்களுக்கான பயிற்சி நெறியை ஆரம்பித்தல் வேண்டும்.

இத்தகவல்களை அந்த அதிகாரி தெரிவித்தார். (ஒ—5)

## வல்லிபுரம் பகுதியில் மண் அள்ளுவது அதிகரிப்பு

பருத்தித்துறை, ஆக. 19

துன்னாலை வடக்கு வல்லிபுரம் பகுதியில் சட்ட விரோத மண் ஏற்றல் நடவடிக்கைகள்நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தினந்தோறும் வெளியிடங்களிங்களிலிருந்து நூற்றுக்கணக்கான உழவுயந்திரங்களும், லொறிகளும் அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோத மண் ஏற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.

துன்னாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. முருகேசு ஸ்ரீஸ்கந்தராசா பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலுவுக்கு இதுபற்றி சுட்டிக்காட்டி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளார். (இ-ஐ-118)

## நெடுந்தீவில் குடிதண்ணீர் தொட்டிகளை நிறுவநடவடிக்கை

நெடுந்தீவு, ஆக. 19

நெடுந்தீவில் குடிதண்ணீர் விநியோகத்தைச் சீரமைக்கும் பொருட்டு ஒவ்வொன்றும் சுமார் ஐயாயிரம் ரூபா செலவில் பத்து நீர்த்தொட்டிகளை அமைக்க நெடுந்தீவு பிரதேசசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒவ்வொன்றும் நானூறு கலன் நீர் கொள்ளக் கூடிய இத்தொட்டிகள் மக்கள் நெருக்கமாக உள்ள இடங்களில் கட்டப்படும்.

இத்திட்டத்தின் கீழ் இரண்டு கிணறுகள் சாராப்பிட்டியில் ரூபா ஒரு லட்சம் செலவில் வெட்டப்பட்டுள்ளன.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் அனைத்து வேலைகளும் பூர்த்தியாகி விடுமெனவும், அதன்பின்னர் பொது மக்களுக்கு குடிதண்ணீர்க் கஷ்டம் இராது எனவும் பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### பொது எழுதுநர் சேவைப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஆக 19

பொது எழுதுநர் சேவையின் II ஆம் வகுப்பு ''அ'' பிரிவுக்கு நியமிப்பதற்கான பரீட்சை எதிர்வரும் அக்டோபர் மாதம் 22 ஆம் திகதி நடைபெறும்.

இந்தப் பரீட்சையில் தோற்ற விரும்புவோர் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

இவ்வாறு 29-07-1988 வெளியிடப்பட்ட அரச வர்த்தகமானிப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-க)

## வடமராட்சி கிழக்கில் செவ்வாயன்றுதேடுதல்
### ஆண்கள் 8 மைல் நடந்தனர்.

தாளையடி. ஆக. 19

வடமராட்சி கிழக்குப் பகுதி கடந்த செவ்வாய்க்கிழமை சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

அங்கு உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கும் அமுல் செய்யப்பட்டது.

குறிப்பாக தாளையடி, மருதன்கேணி, வத்திராயன, உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய கிராமங்களே சுற்றி வளைக்கப்பட்டன.

சகல வீதிகளும் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டன.

மீன் பிடித்துக்கொண்டு கரை திரும்பிய மீனவர்களையும், வீதியில் நின்றவர்களையும் படையினர் வீட்டுக்குச் செல்லும்படி பணித்தனர்.

அதன் பின்னர் வீடுகளுக்குச் சென்ற படையினர், வீடுகளிலிருந்த ஆண்களை வீதியில் ஓர் இடத்தில் கொண்டு போய் அமரும்படி கூறி விட்டு வீடுகளைச் சோதனையிட்டனர்.

ஆண்கள் எல்லோரையும் பின்பு ஆழியவளைக்கு கால் நடையாக அழைத்துச் சென்றனர். தாளையடி, மருதங்கேணி ஆகிய இடங்களில்உள்ள ஆண்கள் 8 மைல்கள் வரை நடக்க வேண்டியிருந்தது.

ஆழியவளையில்வைத்து மூன்று முகமூடிகளின் முன் ஆண்கள் கொண்டு செல்லப்பட்டனர் அதன் பின்னர் தனித்தனியே விசாரணை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

சிலர் விசாரணைக்காக முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். [ஓ-144]

### சிறப்பாக நடந்த உற்சவம்

வளலாயூர், செபமாலை மாதா ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 15ஆம் திகதி திங்கட்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது.

திருநாள் திருப்பலி [illegible] கொடுத்தார். (இ-51)



### அமெரிக்காவில் பி. எச. டி. பட்டம்

யாழ்ப்பாணம், ஆக.19

தெல்லிப்பளையைச் சேர்ந்த நாகமணி நிர்மலகாந்தன் அமெரிக்காவில், சுற்றாடல் பொறியியலில் பி. எச். டி. பட்டம் பெற்றுள்ளார்.

தெல்லிப்பளைமகாஜனா கல்லூரி பழைய மாணவரும், இலங்கைப் பல்கலைக்கழக இயந்திரவியல் பொறியியலாளருமான இவர்ஏற்கனவே அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றில் சுற்றாடல் பொறியியலுக்கான எம். எஸ். சி. பட்டம் பெற்றவர்என்பது குறிப்பிடத்தக்கது. (க)

### இருவர் தற்கொலை

திருகோணமலை, ஆக 19

அன்புவழிபுரத்தைச் சேர்ந்த குமார் அலெக்ஸாண்டர் (26 வயது) என்பவரும், ஐமுனா ராணி (19 வயது) என்பவரும் அலரிக்காய்களைத்தின்று தற்கொலை செய்து கொண்டனர்.

மரண விசாரணை அதிகாரி திரு. ஏ.சி.ஏ. அக்பர் விசாரணைகளை மேற்கொண்டு தற்கொலை மரணங்கள் எனத் தீர்ப்பு வழங்கினர். (இ-150)

## முன்னாள் இயக்க உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டார்

வடமராட்சி, ஆக 19

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் முறைகேடாக நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டில் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் செய்தகுற்றங்கள் பொதுமக்கள் முன் விசாரிக்கப்பட்டு குற்றங்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இயக்கத்திலிருந்து விலகியபின் இயக்கப் போராளி என்று தன்னை அடையாளம் காட்டிக்கொண்டதுடன் ஆயுதங்களைக் காட்டிப் பொதுமக்களைப் பயமுறுத்தினர் என்றும் மற்றும் சில விடயங்களிலும் தவறுகள் பல செய்தார் என்றும் இவர் மீது குற்றங்கள் சுமத்தப்பட்டன. (இ-ஐ-160)

## மூன்றும் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சி. க. பேரம்பலம்**
(ஆசிரியர்)

மலர்வு 12- 10- 1931 — உதிர்வு 24- 7- 1985

திதி- 19- 8- 1988

அன்புத் தெய்வமே!
ஆண்டு மூன்று உருண்டோடிச் சென்றாலும்
தங்கள் அழியாச் சுவடுகள் எம் மனதில்
ஆர்ப்பரித்து நிற்குதய்யா.
உங்கள் ஆத்மா சாந்திடைய என்றென்றும்
இறைவனைப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்.

லக்சுமிவாசா,
சங்கானை.
(5860)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**திருமதி தங்கம்மா கார்த்திகேசு**

தோற்றம் 27 - 8 - 1907 — மறைவு 21 - 7 - 1988


21-7-88 அன்று சிவபதம் எய்திய எமது பேரன்பு மிக்க அன்னை **திருமதி கார்த்திகேசு தங்கம்மா** அவர்களின் ஈமச்சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அநுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் 20-8-88 சனிக்கிழமையன்று எமதில்லத்தில் நிகழவிருக்கும் **சபிண்டீகரண வைபவத்தில்** கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள்
கா. சோமசுந்தரம்
(கிளிநொச்சி மாவட்டக் கல்வி அதிகாரி)
திருமதி சு. கமலாம்பிகை
கா. கனகசுந்தரம்
யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர்)
மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சேர் பொன் இராமநாதன் வீதி,
வடலி வடக்கு.
(5817)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



ஆண்டவன் நமக்களிப்பு 06-02-1955

அநியாய உயிரிழப்பு 19-02-1988

அவர்களிடம் ஒப்படைப்பு: 29-01-1988
**திரு. சின்னையா குணரத்தினராசா**
(குணம்)

மாதங்கள் ஆறு சென்றாலும்
மனதினில் அமைதியில்லை
வேதங்கள் கூட எங்கள்
வேதனை தீர்க்கவில்லை
விசாரணை என்று சொல்ல
வெள்ளிக்கிழமையும் பார்க்கவில்லை
விநாடியும் தவறாதுன்னை
விரைந்து நாம் ஒப்படைத்தோம்
மனித உயிர்களுக்கு சற்றே
மதிப்பளிப்பர் என்றிருந்தோம்
மாறாக நடந்த கதை மனதைச்
சுட்டெரிக்குதையோ!
வதைப்பதற்கும் உதைப்பதற்கும்
வஞ்சகர்கள் வழி செய்ய
கதைப்பதற்கு இயக்கமின்றிக்
கைகளும் கட்டப்பட்டு
இடங்கள் பல மாற்றப்பட்டு
முடிவிலே அவர் கண்டதென்ன?
நடக்க வலுவின்றி, நீரின்றி நாவற்றி,
உடலெல்லாம் காயமதாய்
கையிலே உள்ள கணையாழி
காணாமற் போய்விடவே
மூவேழு நாட்களின் பின்
உயிர் விட்டாய் ஒரு வெள்ளி
ஆரோடு சேர்ந்தழுவோம்
ஆறுமோ இக்கவலை
அமைதியின் பெயரைச் சொல்ல
அருகதை யாருக்குண்டு?
ஆத்ம சாந்திக்காக மாதம்
ஆறினில் நினைவு கூர்ந்தோம்.
படைக்கலம் இல்லா வீரனொருவன்
அடைக்கலம் என்று தேடி வந்தால்
துடைக்க வேண்டியது அவன் துயரேயன்றி
எடுக்க வேண்டியது அவன் உயிரையல்ல

பெற்றோர், சகோதரர், உறவினர்கள்.

கரவச்சை,
அளவெட்டி வடக்கு.
[5800]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை.

**பொருள்:**

பகைவரால் கெடுக்கப்படாததாய், கெட்டுவிட்ட காலத்திலும் வளம் குன்றாததாய், உள்ள நாடே நாடுகள் எல்லாவற்றிலும் தலையானது என்று கூறுவர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
19-08-1988 த. பெ. இல. 23


## சந்ததிச் சங்கிலி

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பு விகிதம் அதிகரித்து வருவதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டொரு வருடங்களில் இறப்பு விகிதம் திடீரென உயர்ந்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இது அதிர்ச்சியும் கவலையும் தரும் விடயமாகும். தமிழர் மத்தியில் அநியாயச் சாவுகள் இடம்பெற்றுவரும் இவ்வேளையில், கர்ப்பிணித் தாய்மார் இறப்பு விகிதம் அதிகரித்து வருவது என்பது மேலும் மேலும் தாக்கத்தையும், பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தி விடும்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சியில், பரம்பரை வளர்ச்சியில், தாய் - சேய் நலன் மிகவும் முக்கியமானதாகும். சந்ததிகள் தொடர்ந்தால் தான் சமூகம் அழியாமல் இருக்க முடியும். சமூகமும், வரலாறும் தொடர்வதற்கு சந்ததிகள் தொடர வேண்டும்.

சந்ததித் தொடரில் அழிவு ஏற்பட்டு விட்டால் சமூகம் என்று ஒன்று இருக்க, இயங்க, வாழ வாய்ப்பிருக்காது.

ஆகவே, தாய் - சேய் நலன் பேணுதல் ஒரு சமூகத்தின் மிகப் பிரதான தேவையாகிறது.

மக்கள் தொகை அளவுக்கு அதிகமாகி விடக் கூடாது என்பதற்காகக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது வேறு. தாய் சேய் நலனில் அக்கறை காட்டாது கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பு விகிதம் அதிகரிக்க அனுமதிப்பது வேறு.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இந்நாட்டின் சிறுபான்மையினர். உரிமைப் போராட்டம் காரணமாக அவர்களின் சனத்தொகையில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

அதுமட்டுமன்றி, தமிழ்ப் பகுதிகளில் தீவிர குடும்பக்கட்டுப்பாட்டை அமுல் நடத்தி அவர்கள் எண்ணிக்கையை மேலும் குறைக்க சிங்களப் பேரினவாதம் அரசாங்கத்தின் ஊடாகச் செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டதும் உண்டு.

இத்தகைய சூழ்நிலையில் கர்ப்பிணித் தாய்மார் அதிக எண்ணிக்கையில் மரணமடைந்து வரும் விடயம் ஊன்றி அவதானிக்கப்பட வேண்டிய, கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழ்ப் பகுதிகளில் கர்ப்பிணித் தாய்மார் இறப்பு விகிதம் அதிகரித்து வருவது குறித்து கொழும்பு அரசாங்கம் அசிரத்தையாக இருக்கலாம்.

ஆனால் எமது மத்தியில் உள்ள வைத்தியர்கள், வைத்தியத்துறையைச் சேர்ந்த நிர்வாக அதிகாரிகள் இது விடயத்தில் உரிய கவனம் செலுத்தவேண்டும். தங்களால் இயன்ற வரையில், தங்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட வகையிலாவது கர்ப்பிணித் தாய்மார் மரணத்தைத் தவிர்க்க, தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இது விடயத்தில் கொழும்புக்கு இடித்துரைக்க வேண்டும், குறைபாடுகள், வசதியீனங்கள் குறித்து அடிக்கடி, சலிக்காது எடுத்துரைக்க வேண்டும் அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரலாம் அல்லவா?

அதே வேளை இங்கு இயங்கும் தொண்டர் ஸ்தாபனங்கள், வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உதவிகளைப் பெற்றுவது கர்ப்பிணித் தாய்மார் மரணங்களைத் தடுக்கக்கூடிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த முயற்சிக்கலாம்.

குறிப்பாக போஷாக்கின்மை, போக்குவரத்து வசதியீனம் என்பவற்றைத் தவிர்ப்பதில் தொண்டர் ஸ்தாபனங்களின் உதவியைப் பெற வாய்ப்புண்டு என நம்புகிறோம்.

இது விடயத்தில் வைத்தியர்களும், வைத்திய நிர்வாக அதிகாரிகளும், சமூக நலனில் அக்கறை உள்ள நிறுவனங்களும் முக்கூட்டாக ஒன்று சேர்ந்து உழைத்து — தமிழர் சந்ததிச் சங்கிலித் தொடர் அறுபடாமல் இருக்கும் விதத்தில், தாய் - சேய் நலன் பேணும் விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

### ஆரம்ப ஆசிரியர் சம்பளம்

தற்பொழுது ஆரம்ப ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு ஜீ.சி.ஈ. உயர் தரம் சித்தி அடைந்த தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதுபோன்ற சம்பளம் வழங்கப்படும்.

மாதம் ஒன்றிற்கு 1440 ரூபாவுடன் மாதச் செலவுப்படியான 260 ரூபாவையும் சேர்த்து மாதம் ஒன்றுக்கு 1700 ரூபாவை இவர்கள் சம்பளமாகப் பெறுவர்.

இந்தச் சம்பளத் திட்டம் வழமைபோல பயிற்சித் திகதியிலிருந்து வழங்கப்படும் என நம்பப்படுகிறது. (இ-ஜ)

பாகிஸ்தானில் அவசரகாலச்சட்டம்:

# அதிபர் ஸியாவின் மரணம் சதிச்செயலா?

## பதில் அதிபர் குலாம் கான் சந்தேகம்!

இஸ்லாமபாத், ஆக. 18

பாகிஸ்தானில் அவசர காலச் சட்டம் நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது

நாட்டை நிர்வகிக்க முப்படைகளின் தளபதிகள் உட்பட பலர் அங்கம் வகிக்கும் அவசர காலக் கவுன்ஸில் ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்காலிக அரசுத் தலைவராகப் பதவியேற்ற செனட் சபைத் தலைவர் குலாம் இஷாக்கான் புதன் நள்ளிரவில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார். அப்போது அவர் சொன்னதாவது;

★ மறைந்த அதிபர் ஸியா-உல்-ஹக் அறிவித்த பிரகாரம் நவம்பரில் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

★ பாகிஸ்தானின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் ஏற்படாது.

★ அதிபர் ஸியாவின் மரணம் ஒரு சதிச்செயலாக இருக்கலாம் என்ற சாத்தியக் கூற்றை நிராகரிக்க முடியாது.

★ 10 நாள் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படும்.

இப்படி ஜனுப் குலாம் இஷாக்கான் சொன்னார்.

நாட்டின் பதில் அரசுத் தலைவர் என்று முதலில் அழைக்கப்பட்டிருந்தும் பின்னர் அப்பதம் கைவிடப்பட்டு தலைவர் குலாம் இஷாக்கான் என்றே அழைக்கப்படுகின்றார் என்று பி.பி.சி வானொலி தெரிவித்தது.

இதனிடையில் — ஸியாவின் விமானம் ஏவுகணையால் தாக்கப்பட்டிருக்கலாம் அல்லது அவ்விமானத்துடன் இன்னொரு ஹெலிக்கொப்டர் மோதியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு சதிச்செயல் என்றே மேற்கு நாட்டு ராஜதந்திரிகள் கருதுகின்றனர்.

### விசாரணை நடத்த உயர் மட்டக் குழு நியமனம்

இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்த உயர் மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது

### முதல் தடவையாக தாக்குதல்

புதுடில்லி, ஆக. 19

பஞ்சாப் மாநிலத்தில் முதல் தடவையாக சீக்கியத் தீவிரவாதிகள் இந்திய இராணுவத்தினர் மீது நேற்று தாக்குதல் நடத்தினார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

### ஸியாவின் கடைசி நிமிடங்கள்......

இஸ்லாமபாத், ஆக. 18

அதிபர் ஸியா சென்ற விமானம் புதன்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு விபத்துக்குள்ளானது.

இஸ்லாமபாத்தில் இருந்து 300 மைல் தொலைவில் உள்ளது பவல்பூர் பாலைவனப் பகுதி. லாகூருக்கு அருகில் உள்ள இப்பிரதேசத்துக்கு அதிபர் ஸியா சி 130 ஹெர்குலிஸ் விமானத்தில் புதன் சென்றிருந்தார்.

அதிபருடன், பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் ஆர்னோல்ட், முப்படைகளின் கூட்டுத் தளபதி அப்துல் ரஹ்மான், 20 உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட மொத்தம் 30 பேர் பயணம் செய்தனர்.

பவல்பூர் பாலைவனப் பகுதியில், அமெரிக்கா கடைசியாக வழங்கிய நவீன யுத்த டாங்கியின் பரீட்சார்த்த -மோதலை அதிபர் ஸியா கோஷ்டி நேரில் பார்வையிட்டது.

அதன் பின்னர் 3.45 மணியளவில் ஸியா கோஷ்டி இஸ்லாமபாத் நோக்கிப் புறப்பட்டது.

விமானம் மேலே எழும்பிய சில விநாடிகளில் நடுவானில் வெடித்துச் சிதறியது. சிதறுண்ட விமானத்தின் பகுதிகள், சடலங்கள் நான்கு மைல் சுற்றளவுப்பிரதேசத்தில் வீசப்பட்டன.

## வஞ்சிக்கப்பட்ட காதலன் கோடரியுடன் வஞ்சியரைத் தேடி சீனாவில் வேட்டை!

பீகிங், ஆக 18

காதலி ஏமாற்றி விட்டதால் காணும் இளம் பெண்களை எல்லாம் கோடரியால் தாக்கி வரும் 22 வயது இளைஞன் லூசியாங் என்பவனைச் சீனப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

இதைச் சீனச் செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

இதுவரை 25 இளம் பெண்கள் இந்த நபரின் கோடாரித் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளனர்.

கடந்த பத்து மாதங்களாக இளம் பெண்களைத் தேடி இருளடைந்த வீதிகளூடாக சைக்கிளில் இந்த நபர் திரிகிறார்.

''காதலி ஏமாற்றி விட்டாள். அதற்குப் பழி வாங்கப் போகிறேன். என்னை நீங்கள் பிடிக்கும் வரை நான் காணும் இளம் பெண்களைக் கோடரியால் வெட்டுவேன்'' இப்படி லூசியாங் தொலைபேசி மூலம் பொலீஸாருக்கு அறிவித்திருக்கிறார் (எ)

# அந்தகாரம் அகன்று விட்டது; பெனாஸிர் பூட்டோ கருத்து!

இருள் சூழ்ந்த நிழல் அகன்று விட்டது என்று திருமதி பெனாஸிர் பூட்டோ சொன்னார்.

அதிபர் ஸியா மரணம் குறித்து அவர் பி.பி.சி. செய்தியாளரிடம் கருத்து வெளியிட்டார்.

ஜனநாயகத்துக்காக அர்ப்பணித்துள்ள எனது குடும்பமும் ஏனையோரும் ஒரு இருண்ட நிழலின் கீழ் அச்சத்துடன் வாழ்ந்து வர வேண்டியிருந்தது.

அதிபர் ஸியாவின் மரணத்தின் மூலம் அந்த நிழல் அகன்று விட்டது.

இப்படி திருமதி பெனாஸிர் பூட்டோ சொன்னார்

பெனாஸிரின் தந்தை பூட்டோ, பாகிஸ்தான் பிரதமராகப்பதவி வகித்தவர். அவர் தான் இராணுவத்தில் கனிஷ்ட தரத்தில் இருந்த ஸியாவை இராணுவத் தளபதியாக்கினார்.

1977 இல் இதே ஸியா, இராணுவப் புரட்சி மூலம் பூட்டோவைப் பதவி கவிழ்த்து ஆட்சியைப் பிடித்தார்.

பின்னர் பூட்டோ மீது கொலைக் குற்றஞ் சாட்டித்தூக்கிலிட்டார்.

திருமதி பெனாஸிர் இப்போது பிரதான எதிர்க்கட்சியான மக்கள் கட்சித் தலைவியாக இருக்கிறார். (எ)

### உலகத் தலைவர்கள் அஞ்சலி!

லண்டன், ஆக 18

ஸியாவின் மரணம் குறித்து ஐ.நா. பொதுச் சபை நேற்று முன்தினம் ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தியது.

இந்தியப் பிரதமர், ஜனாதிபதி, பிரிட்டிஷ் பிரதமர், அமெரிக்க ஜனாதிபதி ஆகியோர் அனுதாபம் தெரிவித்தனர்.

இந்திய மந்திரி சபை நேற்றுக் கூடி அனுதாபம் தெரிவித்தது.

ஸியாவின் மறைவு வளைகுடா நாடுகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியது. (எ)

### பர்மாவில் பாதுகாப்பு தீவிரம் புதிய அரசுத்தலைவர் இன்று தேரிவு

ரங்கூன், ஆக 18

பர்மாவின் சோஷலிச புரோகிராம் கட்சியின் புதிய தலைவர் தெரிவு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

கட்சித் தலைவர் பதவியில் இருந்தும் அரசுத் தலைவர் பதவியில் இருந்தும் திரு. ஸின்லுவின் ராஜினாமச்செய்தகைத் தொடர்ந்து புதிய தலைவர் தெரிவு இடம்பெறவிருக்கிறது.

பர்மாவில் ஒரு கட்சி ஆட்சி முறை அமுலில் இருப்பது தெரிந்ததே.

இதனிடையில் பாதுகாப்பை உறுதிப்படுத்த இராணுவத்துக்குக் கூடுதல அதிகாரங்களை அரசு வழங்கியிருக்கிறது.

பதினெட்டுத் தினங்கள் மட்டுமே பதவியில் இருந்துவிட்டு விலகிய திரு. ஸின்லுவின் மக்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று கோரி கிளர்ச்சி நடத்தும்படி அரசு எதிர்ப்புக் குழுக்கள் அழைப்பு விடுத்துள்ளன. (எ)

### வாழ்த்து!

ஜோஹன்னஸ்பர்க், ஆக 18

கறுப்புஇனத்தலைவர் நெல்ஸன் மண்டேலா விரைவில் சுகமடைய தென் ஆபிரிக்கஜனாதிபதி போத்தா நேற்று வாழ்த்துச் செய்தி அனுப்பினார். (எ)

# வீட்டுக் காவலில் உள்ளோரை கைது செய்து களங்கம் கற்பிப்பதா?

### கருணாநிதி கண்டன அறிக்கை

சென்னை, ஆக. 19

வீட்டுக்காவலில் இருக்கும் விடுதலைப் புலிகளைக் கைதுசெய்து களங்கம் கற்பிப்பதா?

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி இது தொடர்பாக பிரதமர் ராஜீவ் காந்திமீது கண்டனம் தெரிவித்தார்.

திரு. கருணாநிதி இது தொடர்பாக விடுத்த அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 150க்கு மேற்பட்டவர்கள் சென்னை, மதுரை, திருச்சி, ராமேஸ்வரம் போன்ற இடங்களில் திடீரெனக் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே வீட்டுக் காவலில் இருந்த சிலரும் மத்திய சிறைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கைகால் ஊனமுற்றும் காயமுற்றும் நீண்ட நாட்களாக நடமாட முடியாமல் சிகிச்சைபெற்றுக்கொண்டிருந்த விடுதலைப் புலியினரும் இப்படிக் கைதுசெய்யப்பட்டவர்களில் அடங்குவர்.

**கைது ஏன்?**

ராஜீவ் காந்தியின் தமிழ்நாட்டு வருகையின போது விடுதலைப்புலிகளைப்பற்றிக் கூறிய கருத்துக்கும் இந்தக் கைது படலத்துக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது.

யாராயினும் தனிப்பட்ட குற்றங்களுக்காக நடவடிக்கை எடுப்பதில் நாம் குறுக்கேநிற்கவில்லை.

**களங்கம் கற்பிக்க**

ஆனால் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுதும் ஏற்கனவே அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளைக் கைது செய்வதன் மூலம் அவர்களைத் தங்கள் விருப்பத்துக்கு மிரட்டிப் பணிய வைக்க முயற்சி நடக்கிறது.

பொதுவாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது பொதுமக்களிடையே களங்கம் கற்பிக்கத் தொடுக்கப்பட்டுள்ள இந்த அடக்கு முறையை தி. மு. கழகத்தின் சார்பாக வன்மையாகக் கண்டிப்பதோடு ஒட்டுமொத்தமாகக் கைது செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அனைவரையும் உடனடியாக விடுதலைசெய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

**அழகா! முருகா!!**

அழகா முருகா ஆறுமுகா போற்றி!
ஆறு முகமுடன் அமர்ந்தாய் போற்றி!
இல்லறத் தாரின் இனிதே போற்றி!
ஈகையாளரின் துணையே போற்றி!
உற்ற பேரின்ப வீடே, போற்றி!
ஊற்றாய் அருளும் முருகா போற்றி
எட்டும் துயரைக் களைவாய் போற்றி
ஏறின் அபாயம் தீர்ப்பாய் போற்றி
ஐங்கரன் தம்பி சரவணா போற்றி
ஒளிரும் வேலுடை வேலவா போற்றி
ஓங்காரத் துண்மை உரைத்தாய் போற்றி
ஔவையின் அறிவின் தெளிவே போற்றி
எஃதுணை துன்பம் வந்துற்ற போதும்
உன் துணை வெற்றி நல்கவே செய்யும்.

நி. இராஜம்புஷ்பவனம்

### சமய நிகழ்வுகளில்

**மஹா கும்பாபிஷேகம்**

யாழ்ப்பாணம். ஆக. 19

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய நவக்கிரக நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று 19 ஆம் திகதி வெள்ளி காலை 8. 04 மணி முதல் 9. 04 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறுகிறது.

தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று இறுதி நாள் சங்காபிஷேகமும் இடம்பெறும்.

**ஸ்ரீ அந்திரான் முருகமூர்த்தி மகோற்சவம்**

குருநகர். ஆக. 19

நவாலி தெற்கு. ஸ்ரீ அந்திரான் முருகமூர்த்தி கோவில் மகோற்சவப் பெருவிழா ஆரம்பமாகி உள்ளது. இது வியாழக்கிழமை காலை 10மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 14நாட்கள் நடைபெறும்.

25ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், 27ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

தினமும் மாலை 4மணிக்கு இரவுத் திருவிழாக்கள் ஊரடங்குச் சட்டத்தை அனுசரித்து நடைபெறுமென ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது.

(இ-51)

# தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்தால் மக்கள் நல்ல பாடம் புகட்டுவர்

### சிறிமா எச்சரிக்கிறார்

கொழும்பு, ஆக. 19

தேர்தலை ஒத்திவைக்க இந்த அரசு முயற்சித்தால் மக்கள் நல்லபாடம் புகட்டுவர்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொலன்னாவைத் தொகுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசியபோது முன்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:

பதினொரு ஆண்டுகளாக பதவியில் இருந்து வருபவர் திரு. ஜெயவர்த்தனா. அண்மையில் அவர் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களை அழைத்து மாநாடு ஒன்று நடத்தினார். அப்போது அவர் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படும் என்பதை மறைமுகமாகத் தெரிவித்திருக்கிறார்.

**குத்து வெட்டு**

எப்படியும் டிசம்பருக்கு முன் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டேயாக வேண்டும், வேட்பாளர் யார் என்பதைத் தெரிவு செய்வதில் ஆளும் கட்சிக்குள் குத்துவெட்டு நிலவுகிறது

பிரேமதாஸவா, காமினியா, லலித்தா அல்லது யு. என். பித் தலைவர் ரஞ்சன் விஜயரத்னவா என்பதில் இழுபறியாக உள்ளது.

எவர் போட்டியிட்டாலும் சரி நான் போட்டியிடுவது நாட்டை அதலபாதாளத்தில் இருந்து மீட்டு எடுக்கவே. ஜனாதிபதியாகவேண்டும் என்ற ஆசையில் நான் போட்டியிடவில்லை.

**தீவிரவாதத்துக்கு காரணம்**

இன்று தீவிரவாதம் பெருகக் காரணம் தேர்தல்களை முறையாக உரிய தருணத்தில் நடத்த அரசு தவறியதே ஆகும்.

பதவிக்கு வந்தால் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணப் போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். அதை நாம் சரியான தருணத்தில் வெளியிடுவோம்

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (ஒ-எ)

### முல்லைத்தீவு பிரசைகள்குழுக் கூட்டம்

முல்லைத்தீவு, ஆக. 19

முல்லைத்தீவு மாவட்டப் பிரசைகள் குழுவின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 27-ஆம் திகதிக்கு முன்னர் கூட்டப்பட வேண்டும். புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட வேண்டும். பிரசைகள் குழுவின் கூட்டத்தில் இப்படி ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் திரு. பொன் ... தலைமையில் நடைபெற்றது.

மேலும் பூஸா மற்றும் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் பலர் மூளைக் காய்ச்சலால் வருந்துவதாக அங்கு சென்று பார்வையிட்டுத் திரும்பிய உறவினர்கள் மூலம் அறியப்படுவதால் அவர்களை உடனடியாக விடுதலை செய்யும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு மகஜர்கள் அனுப்புவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ-92)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்களுக்கு உறுதியும் வெண்மையும் கொடுப்பது

**அண்ணா பற்போடி**

அண்ணா பற்பொடி தற்பொழுது மக்களின் வசதிக்கேற்ப 100 g. பக்கட்டுகளிலும் வெளிவருகின்றது!

100 g வெற்றுப் பைக்கட்டுகளைச் சேர்த்துக் கொடுத்து

**இனும் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

# உதயன்

19 - 08 - 1988 வெள்ளிக்கிழமை

வீட்டுப் பாவனைக்கேற்ற முறையில் பைக்கட்டுகளில் வறுத்து அரைத்த

**அண்ணா மிளகாய்த் தூள்**

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**அண்ணா கோப்பிக் கடை**

**யாழ்ப்பாணம்.**

**வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.**

## கிளிநொச்சியில்.....

(1-ம் பக்கத்தொடர்ச்சி) சூரியபுரம் பகுதி மக்கள் பதற்றமும் பீதியும் அடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 6 மணி முதல் 7 மணி வரை சுமார் ஒருமணித்தியால இடைவெளிக்குள் சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று கிளிநொச்சி நகரம் வழமை போல் காணப்பட்டது. ஆனால்பொதுச் சந்தையில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது. (ஓ-76)

## பேச்சுக்களை மீண்டும் தொடக்கவேண்டும்

### மதுரையில் தொண்டமான்

மதுரை, ஆக 19

இந்திய அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மீண்டும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட வேண்டும்.

தமிழ் மக்கள் நலனை முன்னிட்டு இருசாராரும் பேச்சு வார்த்தை மூலம் சமரசத்திற்கு வரவேண்டும்.

இவ்வாறு இலங்கையின் கிராமக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் மதுரையில் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

பேச்சு வார்த்தைகளை நடத்துவதில் இந்தியா ஆர்வம் கொண்டுள்ள போதிலும் விடுதலைப் புலிகள் தரப்பில் ஆர்வம் குறைந்திருப்பது வருத்தத்துக்குரியது.

தமிழ் மக்களின் நலனை முன்னிட்டு இருதரப்பாரும் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும். அதன் மூலமே தமிழ்ப்பகுதியில் அமைதியை உருவாக்கலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (அ-9)

## இந்தியா அஞ்சலி!

புதுடில்லி, ஆக 19

அதிபர் ஸியாவின் மறைவுக்கு இந்திய நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை இந்திய அரசு நேற்று வியாழக்கிழமை முதல் மூன்று நாட்களை தேசிய துக்க தினமாக பிரகடனப் படுத்தியுள்ளது. (ஒ-எ)

## சக கைதிகள் விம்மி அழ பூசாவில் உண்ணாவிரதம் ஆரம்பித்த மூவர்

பூஸா இராணுவமுகாமில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதம் ஆரம்பித்த காட்சி எல்லோர் மனதையும் கசிய வைக்கக்கூடியதாக இருந்தது.

உண்ணாவிரதத்தை இம்மாதம் 14 ஆம் திகதி மூவர் ஆரம்பித்து வைத்தனர்.

அனைத்துத் தமிழ் கைதிகளும் மூவரையும் அழைத்து வந்து ஓர் இடத்தில் அமர வைத்து இரு நிமிட மௌன அஞ்சலியுடனும் இறை வழிபாட்டுடனும் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்ச் செய்தனர். அப்போது கைதிகள் எல்லோரும் தங்களை அறியாமலே கண்ணீர்விட்டு விம்மிவிம்மி அழுதனர்.

முதலாம் கட்டத்தில் நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவரும், ஏழு பிள்ளைகளின் தந்தையும், கடந்த 23 மாத காலமாகத் தடுத்து வைக்கப்பட்டவருமான கனகலிங்கம் தேவராசா (வயது 47), அன்புவழிபுரம் திருமலையைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையும் கடந்த 23 மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டவருமான செல்வராஜா பாக்கியநாதன் (வயது 44), செம்புகவத்த எல் கடுவையைச் சேர்ந்தவரும் ஆறு சகோதரிகளின் சகோதரரும் 23 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டவருமான செல்லையா வாசுதேவன் (வயது 22) ஆகிய மூவருமே முதல் நாளன்று உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தவர்கள் ஆவர். (அ-ஐ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**மாணிக்கம் தசந்தி**

பிறப்பு: 10-08-1968 இறப்பு: 21-07-1988

எம்மை எல்லாம் ஆழ்த்துயரில் ஆழ்த்திவிட்டு தந்தை வழியே நீ சென்று விட்டாய்! உன் பிரிவு எம்மை வாட்டுகின்றது. தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

20-08-1988 அன்று சனிக்கிழமை கீரிமலையிலும், வீட்டிலும் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

தாய், சகோதர சகோதரிகள், உறவினர்கள்.

14, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (5824)

## படை வாகனங்களிலிருந்து சரமாரியாகச் சுடப்பட்டது

### மரண விசாரணையில் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஆக. 19

நானும் சில நண்பர்களும் கோவில் வீதி - ஆஸ்பத்திரி வீதி சந்தியில் நின்று கதைத்துக் கொண்டிருந்தோம். அப்போது கச்சேரிப் பக்கமாக துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது.

சில விநாடிகளில் எம்மைத்தாண்டி இரு அமைதிப்படை வாகனங்கள் சென்றன. அவற்றைத்தொடர்ந்து வந்த இரு அமைதிப் படை வாகனங்களிலிருந்து சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

அதனை அடுத்து நான் வீட்டிற்குள் ஓடிச் சென்றுவிட்டேன்.

சூடு ஓய்ந்த பின் வந்து பார்த்த போது யாழ் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 7 ஆம் நாள் திருச்சபை ஆலயத்திற்கு முன் இருவர் விழுந்து கிடந்தனர். ஓடிச் சென்று பார்த்த போது இருவரும் இரத்தக் காயங்களுடன் கிடந்தனர். உடனடியாக அவர்களை வாகனமொன்றில் ஏற்றி யாழ் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அங்கு அவர்கள் இறந்து விட்டதாக அறிந்தேன்.

இவ்வாறு நேற்று யாழ் போதனா வைத்தியசாலைப் பொலீஸ் பகுதியில் நடைபெற்ற ஜே. அருமைநாதன், அன்ரனிப்பிள்ளை புறூனோ கிறிஸ்ரி ஆகியவர்களின் மரண விசாரணையின் போது சாட்சியமளித்த அல்போன்சன் ஜோர்ஜ் மனோகர் தெரிவித்தார்.

திருமதி மேரி பிரேமா இரத்தினமணி அருமைநாயகம் சாட்சியமளித்த போது கூறியதாவது:

நானும் எனது கணவரும் காலை மரணச் சடங்கு ஒன்றுக்குச் சென்றுவிட்டு நான் முதலில் திரும்பி விட்டேன். எனது கணவர் சவக்காலைக்குச் சென்று விட்டார். சுமார் 10 மணியளவில் பலத்த சூட்டுச் சத்தங்கள் கேட்டன. சில நிமிடங்களில் அயலவர் சிலர் ஓடிவந்து எனது கணவனை சுட்டுவிட்டதாகக் கூறினர். ஓடிச் சென்று பார்த்தபோது எனது கணவரை யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று விட்டதாக அறிந்து அங்கு சென்றேன். அங்கு அவர் இறந்து விட்டதாக அறிந்தேன் என்றார்.

யாழ் மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டார்.

விசாரணையின் பேது யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வணபிதா பிரான்ஸீஸ் யோசவ், வணபிதா விக்ரர் ஞானப்பிரகாசம், பாஷையூரைச் சேர்ந்த பேதுரு பரஞ்சோதி சபிரியல் ஆகியோர் சாட்சியமளித்ததுடன் மரணமான இருவரையும் அடையாளம் காட்டினர்.

விசாரணையின் இறுதியில் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ-9)

## அகதிகளுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி) காலை 9 மணிக்கு சம்பந்தப்பட்டவர்கள் தமக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட பதிவு அட்டையுடன் வருமாறு யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்,

இத்திகதியில் வரத் தவறியவர்களுக்கு வேறு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது எனவும் குறிப்பிட்ட தினத்தில் தவறாது சமுகம் அளிக்கும்படி அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார், [ஒ-10]

## மண்டலாபிஷேக பூர்த்திவிழா

புலோலி சித்திரவேலாயுத சுவாமி கோயிலில் மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று வெள்ளிக் கிழமை நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை புறூனோ கிறிஸ்ரி

அந்தோனிப்பிள்ளை புறூனோ கிறிஸ்ரி (பொறியியலாளர்) அகால மரணமானார்.

இவர் திரு. அந்தோனிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி) காலம் சென்ற திருமதி மரியராணி அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அருமைப் புதல்வனும், யூலியன், பிறிற்ரோ, யோசவ், றூபன், அன்ரனெற், மேபல், யூடி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி ஞானப்பிராகாசத்தின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:

**M. அந்தோனிப்பிள்ளை,**
195, சடற்கரை வீதி, பாஷையூர்.
(5826)

## வவுனியா---

(1-ம் பக்கத்தொடர்ச்சி) கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபற்றி வ. பி.போ. சபை அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்-

நிலைமை சுமுகமாக இருப்பின் இன்றுமுதல் எமது திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுர பஸ் சேவைகள் ஆரம்பமாகும் என்றார். (ஒ-9)

## நேற்றைய...

(1ம் பக்கத் தொடர்ச்சி) (3) எம். பசுபதிப்பிள்ளை (வயது 62) கொக்குவில். இவரது சடலம் அடையாளம் காணப்படாமல்உறவினரின் வருகைக்காக யாழ் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கிறது.

### காயமடைந்தோர்

செல்லையா கந்தசாமி (வயது 46) பலாலி வீதி யாழ்ப்பாணம், திருமதி க.ஜெபசிங்கம்(வயது56) யாழ்ப்பாணம், தம்பிப்பிள்ளை செல்வராஜா (35 வயது) நாயன்மார்கட்டு, நடராசா குகேந்திரன் (வயது 21) அரசடி வீதி, யாழ்ப்பாணம், சிறு காயமடைந்த வேறு சிலர் சிகிச்சைபெற்று வீட்டுக்குச் சென்று விட்டனர். (ஒ-9-10)

## உ
சிவமயம்
## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



**திருமதி சரஸ்வதி வீரசிங்கம்**
(கொழும்பு சரஸ்வதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் காலஞ்சென்ற க. இ. வீரசிங்கத்தின் அன்பு மனைவி)

மலர்வு: 25 - 07 - 1924 உதிர்வு: 20 - 07 - 1988

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் இருந்து எம்மைவிட்டுப் பிரிந்த அன்பின் தீபமே! நாட்கள் பலவானாலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**அன்புப் பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

உடுவில் தெற்கு,
பாலாவோடை,
மானிப்பாய். (5864)

## யாழ்----

[1ம் பக்கத் தொடர்ச்சி) னர்.

வ. பி. போ சபை ஊழியர்களும் தமது பஸ்களை அந்தந்த இடத்திலேயே விட்டு விட்டு ஓடி மறைந்தனர்.

அமைதிப் படையினர் சம்பவம் நடந்த சில விநாடிகளிலேயே யாழ் நகரின் மூலை முடுக்குகளில் எல்லாம் உஷார் நிலையில் காவல் கடமையில் ஈடுபட்டனர். மக்களைதெருவிலே நடமாட விடாது அனைவரையும் திரும்பிச் செல்லுமாறு உத்தரவிட்டனர்.

இதேவேளையில் யாழ். நகரை அடுத்த பகுதிகளில் பலர் அமைதிப் படையினரின் துன்புறுத்தலுக்கு ஆளாகினர் எனக் கூறப்பட்டது. (ஒ-9)

## பொலீஸ் மீது.....

(1-ம் பக்கத்தொடர்ச்சி) ஒன்று வீசப்பட்டதாம்.

அதனையடுத்து ஜீப்பில் இருந்த பொலீஸ் படையைச் சேர்ந்த ஒருவர் கொலையுண்டார். இரண்டு பேர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிய வந்துள்ளது.

இதனை அடுத்து காயமடைந்த ஜவான்களை நான்கு வாகனங்களில் ஏற்றி யாழ் கோட்டைக்கு அமைதிப் படையினர் எடுத்துச் சென்றனர்.

அவ்வேளையில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஆசிரியர் ஒருவரும் பல்கலைக்கழக மாணவன் ஒருவரும் பலியாகினர்.

வயோதிபர் ஒருவர் பலத்த காயங்களுடன் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். மேலும் பலர் காயமடைந்தனர். காயமடைந்த மூவர் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

காயம் அடைந்தவேறு சிலர் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுச் சென்றதாகவும் அறியவந்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து யாழ் நகரின் பல பகுதிகளிலும் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

### யாழ்நகரில்

யாழ். ஆஸ்பத்திரி வீதி-இலங்கை வங்கிக் கிளைக்கு அருகே காவலுக்கு நின்ற பொலீசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அப்பகுதியில் பொதுமக்களில் ஒருவர் காயம் அடைந்தார்.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து யாழ் நகரில் பெரும் பதற்றம் நிலவியது.

அமைதிப் படையினர் நகரில் சில மணி நேரம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

### நாயன்மார்கட்டில்

இதே வேளையில் நாயன்மார்கட்டு பகுதியிலும் மேலும் ஒருவர் அமைதிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி நேற்று மாலையில் கொண்டு வரப்பட்டு யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### கல்வியங்காட்டில்

கல்வியங்காட்டுப் பகுதியிலும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

இப்பகுதியில் பல இளைஞர்கள் தாக்குதல்களுக்கு இலக்கானார்கள்.

[illegible] மாவடிப் பகுதியிலும் [illegible] படையினர் [illegible] சோதனை நடத்தி பலரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர். (உ-க-9-10)

## கைதான....

(1-ம்பக்கத் தொடர்ச்சி) தலை செய்ய வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறி இருந்தனர்.

இதன் மீது எதிர்மனு தாக்கல் செய்ய அரச வழக்கறிஞருக்கு அவகாசம் அளிக்கும் பொருட்டு வழக்கு விசாரணையை சென்ற 16 ஆம் திகதி வரை நீதிபதி ஒத்திவைத்து இருந்தார். (ஓ-௭)

## ஸியாவின்--

(1ம் பக்கத் தொடர்ச்சி) த்தில் காணப்பட்ட பல சடலங்கள் அடையாளங் கண்டு பிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

யூனிபோர்ம் உடைகள் அணிந்திருந்த பதக்கங்கள் மூலம் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

விமானத்தில் இருந்த 'கறுப்புப் பெட்டி'யைக் கண்டுபிடிக்கும் பணியில் பாகிஸ்தான் அதிகாரிகள் ஈடுபட்டு உள்ளனர்.

### சதிச் செயல்

விமான விபத்து நிச்சயம் ஒரு சதிச் செயலே என்று பாகிஸ்தான் விமானப்படையின் முன்னாள் தளபதி அஸ்கர் கான் அறிவித்துள்ளார்.

விமானம் சுக்குநூறாக நொருங்கியது அதனைப் புலப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஒ.எ)

(5-ஆம்பக்கமும்பார்க்க)

**BECON**
**கல்வி நிலையம்**
**விஞ்ஞானம்**
**A/L 90**
**சனி, ஞாயிறு வகுப்புக்கள்**

தாவரவியல் — சர்வானந்தா 8.30-9.30
பௌதிகம் — மணியம் 9 30 - 10 30
இரசாயனம் — சத்தீஸ் 12.00 - 1.45
தூய,பிரயோக கணிதம் } நல்லையா 1 45 - 3.45
விலங்கியல் — தம்பிராஜா 1 45 - 2.45


**வகுப்புக்கள் நடைபெறுகின்றன.**

குறிப்பு:-
திரு. சத்தீஸ் அவர்களின் வகுப்பும் நடைபெறுகின்றது.
(C6267)


**உஷா தையல் மெஷின் தொடர்**



டொமெஸ்டிக் டிலியூக்ஸ் (நேரான தையல்)
ட்ரெப் பீட் பொறிமுறையும் முகப்பு அலங்காரத் தையலும்.
ரூ.பா 3850/-
தையற்காரர் மொடல் ரூ. 4000/-



எக்ஸெலா 30 (ஜிக்சாக் தையலுக்கும் நேரான தையலுக்கும்.)
30 வடிவமைப்பு அச்சுக்கள்
ரூபா. 5,850/-



ஜிக் சாக் எக்ஸேலா 55
பிக்கொட் விளிம்பு தைக்கும் ஊசியும் இரட்டை ஊசியும் உண்டு.
55 வடிவமைப்பு அச்சுக்கள், ஜிக்சாக் தையல், அலைவிளிம்புத் தையல், பொத்தான் துளை தைத்தல், முதலியன.
ரூபா. 7850/-

சகல பாகங்களும் உலோக மெருகிடப்பட்டவை.
ஒரு வருட உத்தரவாதம் இலகு தவணை முறையிலும் வாங்கலாம்,
அண்மையிலுள்ள ஊஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள்.

விநியோகத்தர்:
**ஊஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்**
68, அத்திடிய றோட், ரத்மலானை.
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381

Mel Ads 9353

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்டிற்காக யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 19 08 1988 இல் [illegible] Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org